# தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிதான் டெல்லியின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தும் ஒரே அணி!

## இராணிப்பேட்டையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... 7 ஆம் பக்கத் தொடர்ச்சி!



தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு தொகுதிக்கும் இதுபோன்று நிறைவேற்றப்பட்ட திட்டங்களைச் சொல்லித்தான் இன்றைக்கு வாக்குகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படி, ஒவ்வொரு மாவட்டத்தையும் வளர்த்த காரணத்தால்தான், ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் இன்றைக்கு வளர்ந்திருக்கிறது.

**நமது வளர்ச்சிமீது பொறாமை கொண்ட பா.ஜ.க.**

அதுவும் எப்படி? ஒன்றிய பா.ஜ.க. அரசின் தயவு இல்லாமலேயே இந்தளவுக்கு வளர்ந்திருக்கிறோம். பா.ஜ.க. அரசு பல ஆயிரம் கோடிகளை வாரி வழங்கியும், அவர்கள் ஆட்சி செய்யும் மாநிலங்களால் இந்த வளர்ச்சியைக் காண்பிக்க முடியவில்லை. நம்முடைய வீடுகளில் ஒரு பழமொழி சொல்லுவார்கள், “படிக்கிற புள்ள எங்க இருந்தாலும் படிக்கும்” என்று சொல்லுவார்கள். அதுபோன்று, திறமையிருந்தால் தடைகளை மீறியும் சாதிக்கலாம் என்பதற்கு திராவிட மாடல்தான் சிறந்த எடுத்துக்காட்டாக இன்றைக்கு விளங்குகிறது!

‘மும்மொழித்திட்டம்’ என அராஜகம் செய்கிறார்கள்!

“தமிழ்நாடு வளர்ந்தால், அது இந்தியாவுக்கான வளர்ச்சிதானே” என்று பா.ஜ.க. நினைக்கவில்லை. அந்த அளவுக்கு நம்முடைய வளர்ச்சி மீது பொறாமை!

தமிழர்களின் அடையாளமே மொழிதான்! தமிழர், தமிழ்நாடு, இப்படி நம்முடைய இனம், நாம் வாழும் மாநிலம் என எல்லாமே மொழியை அடிப்படையாகக் கொண்டதுதான்! அப்படிபட்ட மொழியையே அழித்துவிட்டால், தமிழர்களை எளிதாக அடிமைப்படுத்திடலாம்; தமிழர் பண்பாட்டையே அழித்துவிடலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதனால்தான், செம்மொழித் தமிழை அழிக்க, ‘மும்மொழித் திட்டம்’ கொண்டு வந்தே தீருவோம் என்று அடம் பிடிக்கிறார்கள். அராஜகம் செய்கிறார்கள்.

ஒன்றிய அரசின் 2 ஆயிரம் கோடி ரூபாய் கல்வி நிதி வேண்டும் என்றால், இந்தியைப் படித்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். 2 ஆயிரம் கோடிக்காக தமிழர்களின் சுயமரியாதையை அடமானம் வைக்க, நான் ஒன்றும் காலில் விழுந்து பதவி வாங்கிய பழனிசாமி இல்லை; மிசாவுக்கே அசராமல் எதிர்த்து நின்ற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்! மிசாவுக்கே பயப்படாதவன், அமித் ஷாவுக்கா பயப்படுவேன்! நான் மக்களைச் சந்தித்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர். அதனால், என்னுடைய விசுவாசம் என்றைக்குமே தமிழ்நாட்டு மக்களுக்குதான்!

**கலைஞரின் கொள்கை வாரிசு நாங்கள்!**

மாநில உரிமையை அடகு வைத்து பதவியில் நீடிக்க வேண்டும் என்றால், அப்படி ஒரு பதவியே வேண்டாம் என்று சொல்லி, நெருக்கடி காலத்தில் ஆட்சியையே இழந்த கலைஞரின் கொள்கை வாரிசுகள் நாங்கள்!

நம்முடைய உரிமை முழக்கம், தமிழ்நாட்டில் மட்டுமல்ல; டெல்லி நாடாளுமன்றத்திலும் இன்றைக்கு ஓங்கி ஒலிக்கிறது. இந்தியாவில் இருக்கும் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும், நம்மைப் பார்த்து மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

அதனால்தான், இவர்களை இப்படியே விட்டு வைக்கக் கூடாது என்று, தொகுதி மறுவரையறையை கையில் எடுத்திருக்கிறது பி.ஜே.பி. நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கிறது. சமைக்க சிலிண்டர் இல்லாமல், குடும்பங்களும் - ஹோட்டல்களும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்! ஆட்டோ ஓட்டுநர்கள், வண்டி ஓட்டுவதற்கு கேஸ் கிடைக்காமல் தவிக்கிறார்கள், புலம்புகிறார்கள். டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, வரலாற்றில் இல்லாத அளவுக்கு சரிந்து, டேபிளுக்கு அடியில் தவழ்ந்த பழனிசாமி போன்று இப்போது மொத்தமாகப் படுத்துவிட்டது.

அதையெல்லாம் கவனிக்காமல், தேர்தலுக்கு நடுவில் மக்களை திசை திருப்புவதற்காக, தொகுதி மறுவரையறையை இப்போதே நடத்தியாக வேண்டும் என்று, பா.ஜ.க. அரசு திட்டமிட்டு துடி துடிக்கிறது. இந்திய அரசியலையே மாற்றியமைக்கப் போகும் மிகப் பெரிய அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் இது!

**தொகுதி மறுவரையறையில் பெரிய சதித்திட்டம்!**

ஆனால், இதை எப்படி பண்ணப் போகிறார்கள்? என்ன திருத்தம் பண்ணப் போகிறார்கள்? இப்படியான நம்முடைய எந்தக் கேள்விக்கும் விளக்கம் அளிக்க மறுக்கிறார்கள். இவர்கள் இப்படி ரகசியமாக மறைத்து பண்ணுகிறார்கள் என்றால், அதில் கண்டிப்பாக பெரிய சதித் திட்டம் இருக்கிறது என்றுதான் அர்த்தம்!

இதனால், “தமிழ்நாட்டுக்கு தொகுதிகள் உயரும்” என்று, அடுத்த ஏமாற்று வேலையைச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அதில்தான், பெரிய ஆபத்தே ஒளிந்திருக்கிறது.

ஆற்காட்டில் இருந்து எத்தனை பேர் வந்திருக்கிறீர்கள்? உங்களுடைய ஊரில் மக்கன் பேடா வாங்கினால், அதற்குள் பாதாம், முந்திரி, திராட்சை எல்லாம் ஒளித்து வைத்திருப்பார்கள். சரிதானே? அதுபோன்று, இந்தத் தொகுதி மறுவரையறைக்குள், நமக்கான ஆபத்தை ஒளித்து வைத்திருக்கிறார்கள்.

எப்படி என்று சொல்கிறேன்... நன்றாகக் கவனியுங்கள். தமிழ்நாட்டைவிட - உத்தரப்பிரதேசத்துக்கு இப்போது 41 தொகுதிகள் அதிகமாக இருக்கிறது. இதுவே, பா.ஜ.க. அரசு தொகுதி மறுவரையறையைக் கொண்டுவந்துவிட்டால், இந்த வித்தியாசம் 61-ஆக உயர்ந்துவிடும்.

## அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிப்பீர்!

**நமது குரலை நசுக்கக் பார்க்கிறார்கள்!**

இப்படி ஒட்டுமொத்தமாக, தென் மாநிலங்களுக்கும் - வட மாநிலங்களுக்குமான இடைவெளியை அதிகரித்து, இதன்மூலமாக நாடாளுமன்றத்தில் நம்முடைய குரலை நசுக்கப் பார்க்கிறார்கள். இந்தியா மொத்தத்தையும் பாதிக்கும் முடிவு இது. ஆனால், மாநில அரசுகள் மற்றும் எதிர்க்கட்சிகளுடன் எந்த ஆலோசனையும் நடத்தாமல் அவசர அவசரமாக இதை அரங்கேற்றப் பார்க்கிறார்கள்.

அதுவும் இது தேர்தல் காலம். சாதாரண மக்களுக்கே எத்தனை கட்டுப்பாடுகளை தேர்தல் ஆணையம் விதிக்கிறார்கள்? ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு ஏன் எந்தக் கட்டுப்பாடும் இல்லை? எப்படி, 5 மாநிலத் தேர்தலுக்கு இடையே நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரை அவர்கள் கூட்டுகிறார்கள்? ஏன், தேர்தல் முடிந்து 29-ஆம் தேதிக்குப் பிறகு கூட்டினால் என்ன? எதுக்கு இந்தப் பதற்றம்?

**பெண்கள் இடஒதுக்கீடு! சோனியா காந்தியின் கேள்வி!**

பா.ஜ.க.வின் இந்த ஜனநாயக விரோதச் செயலுக்கு எதிராக, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மரியாதைக்குரிய சோனியா காந்தி அம்மையார் அவர்கள், ‘தி ஹிந்து’ பேப்பரில், இன்றைக்கு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அவர்கள் சொல்லியிருப்பதை சுருக்கமாக உங்களுக்காகச் சுட்டிக் காட்டுகிறேன்.

“முதலில், பெண்கள் இடஒதுக்கீட்டை எதற்காக எந்தத் தேவையும் இல்லாமல் தொகுதி மறுசீரமைப்போடு முடிச்சுப் போடுகிறீர்கள்? பா.ஜ.க. நினைத்திருந்தால் 2024 தேர்தலிலேயே பெண்கள் இடஒதுக்கீட்டை அமல்படுத்தி இருக்கலாம்... எதிர்க்கட்சிகளான நாங்களும் அதைத்தானே கேட்டோம்?

இப்போது தமிழ்நாடு, மேற்கு வங்கத் தேர்தலுக்கு இடையில், எதற்கு இதை பண்ண வேண்டும்? “ஜூலை மாதம் மழைக்கால கூட்டத்தொடர் தொடங்க இருக்கிறது. அதற்கு முன் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி விவாதித்த பிறகு, பொறுமையாக இதை செய்யலாமே... இப்போது என்ன அவசரம்? உங்களுடைய தலை மேல் வானம் இடிந்து விழுந்திடுமா என்ன?” என்றும் சோனியா காந்தி அவர்கள் கேட்டிருக்கிறார்.

அவர்கள் கேட்டிருப்பது 100 சதவீதம் சரியான கேள்விதான். நாட்டு மக்கள் அனைவரும் கேட்கும் கேள்விதான். இதையெல்லாம் விட முக்கியமாக ஒரு கருத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**குடும்பக் கட்டுப்பாடு - சிறப்பாகச் செயல்படுத்தியதற்குத் தண்டனை!**

ஒன்றிய அரசு சொன்னதை மதித்து, குடும்பக் கட்டுப்பாட்டை சிறப்பாகச் செயல்படுத்தி, குறைவாக குழந்தை பெற்றுக் கொண்ட தமிழ்நாடு போன்ற தென் மாநிலங்கள், இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவியிருக்கிறார்கள். நாட்டிற்கு நல்லது செய்த அவர்களுக்குத் தண்டனை கொடுப்பது போன்றது இது. தொகுதி மறுவரையறை எனும் பெயரில் அவர்களின் நாடாளுமன்ற வலிமையை - அரசியல் வலிமையை குறைக்கக் கூடாது என்று அழுத்தமாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு பாதிக்கக் கூடாது என்று தி.மு.க. சொல்வதை, அன்னை சோனியா காந்தி அவர்கள் பா.ஜ.க.வை எதிர்த்துப் பேசுகிறார்கள்.

இங்கேயும் ஒருவர் இருக்கிறாரே? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள்! “அவர் வாயில் என்ன கொழுக்கட்டையா வைத்திருக்கிறார்?” என்று மக்கள் கேட்கிறார்கள்.

அம்மையார் ஜெயலலிதா அவர்களுடன் நமக்கு ஆயிரம் அரசியல் விமர்சனங்கள், கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அந்த அம்மையார் உயிருடன் இருந்திருந்தால், தொகுதி மறுவரையறை போன்று, மாநில உரிமைகளைப் பறிக்கும், தமிழ்நாட்டை பாதிக்கும் விஷயத்தில் தி.மு.க.வைப் போன்றே நிச்சயமாக உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருப்பார். அதற்கு உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், ஜி.எஸ்.டி., நீட் போன்றவற்றை அவர் கடுமையாக எதிர்த்தார். ஏன், அவர் ஒரு வார்த்தை சொன்னாரே, “குஜராத் மோடியா, இந்த லேடியா?” எனக் கேள்வி எழுப்பினார்.

**வாழ்வாதாரப் பிரச்சினையில் குரல் கொடுக்காத அ.தி.மு.க.!**

இன்றைக்கு அவருடைய அ.தி.மு.க.வின் நிலைமையைப் பாருங்கள். தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சி, தமிழ்நாட்டின் வாழ்வாதாரப் பிரச்சினையில்கூட பா.ஜ.க.வை எதிர்த்து குரல் கொடுக்க முடியாமல் இருக்கிறது.

அம்மையார் ஜெயலலிதா அவர்களை, ‘அம்மா... அம்மா’ என்று சொல்லிவிட்டு, தமிழ்நாட்டிற்கு ஆபத்து வரும்போது இப்படி சும்மா இருக்கிறீர்களே? இது நியாயமா பழனிசாமி அவர்களே... இது அவர்களுக்குச் செய்யும் துரோகம் இல்லையா... ‘மம்மி’ மறைந்த பிறகு, பழனிசாமி அந்தக் அ.தி.மு.க.வை ‘டம்மி’ ஆக்கிட்டார். இதுதான் உண்மை!

தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிதான் டெல்லியின் படையெடுப்பை தடுத்து நிறுத்தும் ஒரே அணி!

டெல்லி அணியின் அஜெண்டா என்ன? மாநில அரசுகளை ஒழிப்பது, தமிழை அழிப்பது, சிறுபான்மையினரை முடக்குவது, இந்தியைத் திணிப்பது, சமஸ்கிருதத்தை புகுத்துவது, ஆட்சிக்கு வந்த 12 ஆண்டுகளில் இதைத் தாண்டி வேறு ஒன்றும் அவர்கள் செய்யவில்லை.

**‘சூப்பர் ஹிட்’ அறிவிப்புகள்!**

ஆனால், நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு வெறும் ஐந்தே ஆண்டுகளில் இந்தியாவே திரும்பிப் பார்க்கும், எல்லா மாநிலங்களும் பின்பற்றும் முத்திரைத் திட்டங்களை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம்.

இதனுடைய அடுத்தகட்டமாகத்தான், 2026 தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறேன். சாதாரண அறிக்கை அல்ல அது, சூப்பர்ஸ்டார் அறிக்கை! “சூப்பர்ஸ்டாரு யாருனு கேட்டா, சின்ன குழந்தைகள்கூட சொல்லும்”. இப்பொழுது நம்முடைய சூப்பர்ஸ்டாரில் அடங்கியிருக்கும், சூப்பர் ஹிட் அறிவிப்புகளை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

முதலில் ‘இல்லத்தரசி’ திட்டம்! ஃபர்ஸ்ட் பாலே சிக்சர்! ‘இல்லத்தரசி’ திட்டத்தில் எவ்வளவு ரூபாய்க்கு கூப்பன் தரப் போகிறோம்! (‘8 ஆயிரம்’ என மகளிர் குரல்) இந்தக் கூப்பனை வைத்து, உங்களுக்குத் தேவைப்படும் வீட்டு உபயோகப் பொருளை புதிதாதகவும் வாங்கிக் கொள்ளலாம்; இல்லையெனில், பழைய பொருளை ‘எக்ஸ்சேஞ்ச்’ செய்தும் வாங்கிக் கொள்ளலாம். உங்களுக்குப் பிடித்த கடையில், உங்களுக்குப் பிடித்த கம்பெனியில் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். என்னென்ன பொருட்கள்? வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், டி.வி., கிரைண்டர், மிக்சி, மைக்ரோ-வேவ் அவன், இண்டக்ஷன் ஸ்டவ் என்று இவற்றில் எதை வாங்கலாம் என்று இப்போதே பெண்கள் எல்லாம் டிஸ்கஸ் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இதில் எதை வாங்கலாம் என்று வீட்டுக்காரரிடம் கேட்காதீர்கள். எதாவது சொல்லி, உங்களை குழப்பிவிடுவார்கள். எதாவது பிரச்சினை செய்தார்கள் என்றால், “அண்ணனிடம் சொல்லிவிடுவேன்” என்று சொல்லிவிடுங்கள். இது முழுக்க முழுக்க உங்களுக்காக நான் கொண்டு வந்திருக்கும் திட்டம். பெண்கள்தான் ‘டிசைட்’ செய்ய வேண்டும்.

எப்படி தலைவர் கலைஞர் சொன்னபடியே கலர் டி.வி.யும், கேஸ் அடுப்பும் கொடுத்தாரோ, அவருடைய மகனான நானும், சொன்னபடியே ‘இல்லத்தரசி’ திட்டத்தை நிறைவேற்றுவேன்.

அடுத்த வாக்குறுதி, உரிமைத்தொகை. இப்போது மாதம் ஆயிரம் ரூபாய் என்று ஒரு கோடியே 31 லட்சம் சகோதரிகள் பெற்று வரும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இனி மாதம் 2 ஆயிரம் ரூபாய்.

**உதயசூரியனுக்கு தான் எங்கள் ஓட்டு என பெண்கள் முடிவு!**

இப்போதே பெண்கள் எல்லோரும் கணக்குப் போட ஆரம்பித்துவிட்டார்கள். என்ன கணக்கு? பொங்கலுக்கு முன்பு, சொல்லிவிட்டு 3 ஆயிரம், பிப்ரவரியில் சொல்லாமலேயே 5 ஆயிரம், ஆகமொத்தம் 8 ஆயிரம். அடுத்து, ‘இல்லத்தரசி’ கூப்பனில் 8 ஆயிரம். “எட்டு + எட்டு! உதயசூரியனுக்குத்தான் எங்கள் ஓட்டு!” என பெண்கள் அனைவரும் முடிவு செய்துவிட்டார்கள். அதனால், நம்முடைய வெற்றியும் இந்த முறை யாரும் எட்டாத உயரத்துக்குப் போகப் போகிறது.

இதுமட்டுமல்ல, கல்லூரிக்குப் போகும் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் - தமிழ்ப் புதல்வன், உதவித்தொகையும் ஆயிரத்தி 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**மேலும், முதியோர், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற பெண்கள் என எல்லா உதவித்தொகைகளும் இனி இரண்டு மடங்காக வழங்கப் போகிறோம்.**

**நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

**கரும்பு கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு 4 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

**பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.**

**அடுத்த 5 ஆண்டுகளில் 10 ஆயிரம் புதிய பேருந்துகள் இயக்கப்படும்.**

**1000 வெற்றிப் பள்ளிகள்!**

**காலை உணவுத்திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கப்படும்.**

**ஆயிரம் ‘வெற்றிப் பள்ளிகள்’ அமைக்கப்படும்.**

**அனைத்து வகுப்பறைகளும் ‘ஸ்மார்ட்’ வகுப்பறைகள் ஆக்கப்படும்.**

**அடுத்த 5 ஆண்டுகளில் 35 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கப் போகிறோம்.**

**‘கலைஞர் கனவு இல்லம்’ உள்ளிட்ட திட்டங்கள் மூலமாக 10 லட்சம் ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தரப் போகிறோம்.**

**1000 குழந்தைகள் காப்பகங்கள்!**

**தொழிற்சாலைகள் அதிகமுள்ள நகரங்களில், பெண்கள் வேலைக்குச் செல்வதை எளிதாக்க, ஆயிரம் குழந்தைகள் காப்பகங்களை உருவாக்கப் போகிறோம்.**

**மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் ஷேர் ஆட்டோ வாங்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற்றுத் தரப்படும்.**

**பிசினஸ்-மேன் மாதிரி, ‘பிசினஸ்-வுமன்’-களை உருவாக்குவதற்காக, சுய உதவிக்குழுப் பெண்கள் தொழில் தொடங்க, எந்த சூரிட்டியும் இல்லாமல் 5 லட்சம் ரூபாய் வரை மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படும்.**

**BC, MBC, சீர்மரபினர், சிறுபான்மையினர், ஆகியோருக்கும், தொழில் தொடங்க கடன் பெறும் உச்சவரம்பு, 30 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.**

**நெசவாளர்கள் நிறைய இருக்கும் மாவட்டம் இது.**

**நெசவாளர்களின் நலனுக்காக தமிழ்நாட்டில் 10 கைத்தறிப் பூங்காக்கள் அமைக்கப்படும்.**

**50 கைத்தறிக் குழுமங்கள் அமைக்கப்படும்.**

**10 ஆயிரம் கைத்தறிகளை 90 விழுக்காடு மானியத்துடன் நவீனப்படுத்துவோம்.**

**இராணிப்பேட்டை, திருப்பத்தூர் போன்ற மாவட்டங்களை உள்ளடக்கிய இந்த வடக்கு மண்டலத்தில், தொழில் வாய்ப்புகளைக் கண்டறிந்து, பொது சேவை மையங்கள் அமைக்கப்படும்.**

**இராணிப்பேட்டை மாவட்டம் - அரக்கோணம் பகுதியில் ஒருங்கிணைந்த பெருங்குழுமம் அமைக்கப்படும்.**

**பணியாளர்கள் தங்குவதற்கான ஹாஸ்டல் அமைக்கப்படும்.**

**வடமாவட்டங்கள் வளர்ச்சி பெற வாக்களிப்பீர்!**

மக்கள், உங்களுக்கு மகிழ்ச்சியா? எம்.பி.-ஆக இருக்கும் ஜெகத்ரட்சகனுக்கு மகிழ்ச்சியா?

இப்போது நான் சொன்ன வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேறி, வட மாவட்டங்கள் தற்போது கண்டுவரும் முன்னேற்றம் தொடர, தமிழ்நாடு மென்மேலும் வளர, அரசியல் விருப்பு வெறுப்புகள் அனைத்திற்கும் அப்பாற்பட்டு, நீங்கள் எல்லாரும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்குத்தான் வாக்களிக்க வேண்டும்.

“தமிழ்நாடா? டெல்லியா?” என்ற இந்த ஜனநாயகப் போரில், தமிழ்நாடு அணிதான் வெல்ல வேண்டும். ஏதோ, நான் முதலமைச்சர் ஆகவோ - 30 பேர் அமைச்சர் ஆகவோ - நம்முடைய கூட்டணியில் 200 பேர் MLA ஆகவோ - இதை நான் சொல்லவில்லை. தமிழ்நாட்டைக் காக்க கழகம்தான் மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டும். ஏழாவது முறையும் நாம்தான். ஏன், இனி எப்போதும் நாம்தான் என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

அதற்கு, ராணிப்பேட்டை தொகுதியில் காந்தி அவர்களுக்கும், ஆற்காடு தொகுதியில் ஈஸ்வரப்பன் அவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

அதேபோன்று, சோளிங்கர் தொகுதியில் அன்புக்குரிய என்னுடைய அருமைச் சகோதரர் ராகுல் காந்தியின் அன்பைப் பெற்ற காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் முனிரத்தினம் அவர்களுக்கு கை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

அரக்கோணம் தொகுதியில் அருமைச் சகோதரர் தொல். திருமாவளவன் அவர்களின் ஆதரவு பெற்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் எழில் கரோலின் அவர்களுக்கு பானை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

அமையவிருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில், எங்கள் சாதனைகளை நாங்களே முறியடிக்கும் வகையிலான ஆட்சியை நாங்கள் வழங்குவோம்.

நாடு வளம் பெற, நல்லாட்சி தொடர்ந்திட, ஆதரிப்பீர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை!

வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# தமிழ்நாட்டைக் காக்க கழகம்தான் ஆட்சி அமைக்க வேண்டும்!